# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2010/20 - 2017 මාර්තු මස 15 වැනි බදාදා - 2017.03.15

*2010/20 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**சுங்க அறிவித்தல்**

**சுங்கக் கட்டளைச சட்டத்தின் 101 ஆம் பிரிவின் கீழான கட்டளை**
**(அத்தியாயம் 235)**

**ஆடை உற்பத்தி மற்றும் ஆடை ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களினால் சுங்க இறக்குமதி வரிவிலக்கு அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை அகற்றுதல்**

*திருத்தப்பட்ட சுங்கக் கட்டளைச் (அத்தியாயம் 235) சட்டத்தின் 101 (1) (எச்) எனும் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், ஆடை உற்பத்தி மற்றும் ஆடை ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனமொன்றினால் நிபந்தனை அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட சுங்க இறக்குமதி வரிவிலக்கு திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை அகற்றுவதற்கான சுங்கப் பெறுமதியினை தீர்மானிக்கும் பொருட்டு ஒழுங்குவிதிகளை இத்தால் நிர்ணயிக்கின்றேன்.*

2. *இவ் ஒழுங்குவிதிகளின் அட்டவணை I இன் IV ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதும் அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள எச். எஸ். குறியீட்டு இலக்கங்களின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளதுமான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பின்வரும் நிபந்தனைகளின் கீழ் அத்தகைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களாக இருக்குமிடத்து அவற்றினை அகற்றுவதற்கான சுங்கப் பெறுமதியானது "பூச்சியமாக" தீர்மாணிக்கப்படும்.*

   (i) *ஆடை உற்பத்தி மற்றும் ஆடை ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனமொன்றினால் நிபந்தனை அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட சுங்க இறக்குமதி வரிவிலக்குத் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட; மற்றும்*

   (ii) *இறக்குமதி செய்யப்பட்ட திகதியிலிருந்து 10 வருடங்களுக்கு மேலதிகமாக பாவிக்கப்பட்டது என அத்தகைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பாவிக்கப்பட்ட கால எல்லை அனுமதியளித்த அதிகாரியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.*

3. *மேலே 2(ii) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாவனைக் காலத்தை உறுதிப்படுத்துவதற்கான அனுமதியளிக்கப்பட்ட அதிகாரியாக இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகம் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டதும், ஆடை உற்பத்தி மற்றும் ஆடை ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதுமான நிறுவனம் சார்பாக இருக்கவேண்டும் என்பதுடன் சுங்கப் பணிப்பாளர் நாயகமானவர் ஏற்றுமதி நோக்கங்களுக்காக தற்காலிகமாக இறக்குமதி செய்யப்படும் திட்டதின் கீழ் தாபிக்கப்பட்டதும், ஆடை உற்பத்தி மற்றும் ஆடை ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதுமான நிறுவனம் சார்பாக இருக்கவேண்டும்.*

4. இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக, குறித்த இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் நுழைவுப் பற்றுச் சீட்டின் திகதி (சுங்க பிரகடணத்தில் உள்ள திகதி) பொருட்களின் இறக்குமதி செய்யப்பட்ட திகதியாக கொள்ளப்படுதல் வேண்டும்.

5. சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் சுங்கத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முறையில் அட்டவணை I இன் IV ஆம் நிரலில் விபரிக்கப்பட்டுள்ள இயந்திரம் அல்லது உபகரணம் ஒவ்வொன்றையும் அகற்றுவதற்கு பொருத்தமான பெறுமதி ஒன்றினை சுங்க இறக்குமதி வரி விதிப்பு நோக்கத்திற்காக அல்லாது தரவு செயலாக்க நோக்கத்திற்காக உட்படுத்தப்படலாம்.

இவ்வொழுங்குவிதிகள் 2017, மாச்சு மாதம் 15 ஆந் திகதியிலிருந்து மறு அறிவித்தல் செய்யப்படும் வரை வலுவுடையதாக கருதப்படும்.

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு - 01,
2017, மாச்சு 15.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II | நிரல் III | நிரல் IV |
|---|---|---|---|
| இல. | எச். எஸ். குறியீடு | விபரம் | அகற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள இயந்திரங்களும் உபகரணங்களும் |
| 1. | 8421.19.90 | பிற (மைய விலக்கு உலர்த்திகள் உட்பட பிற அணுப்பிரிக்கும் அலகுகள்) | ● நீர் கரைக்கும் இயந்திரம் |
| 2. | 8441.10 | வெட்டும் இயந்திரங்கள் | ● வரைவு இயந்திரம் |
| 3. | 8443.32.30 | புடவைகளுக்கான அச்சு இயந்திரங்கள் | ● திரை அச்சிடும் இயந்திரம் |
| 4. | 8443.19.90 | பிற (பிற - (தலைப்பு இல. 84.42 கொண்ட தகடுகள், சிலிண்டர்கள் மூலம் அச்சிடப் பயன்படுத்தப்படும் அச்சு இயந்திரங்கள் மற்றும் ஏனைய அச்சிடும் கூறுகள்) | ● வரைவு இயந்திரம் |
| 5. | 8445.30.00 | புடவை நூலினை இரட்டிப்பாக்கும் அல்லது திரிக்கும் இயந்திரங்கள் | ● நூல் திரிக்கும் இயந்திரம் |
| 6. | 8445.40.00 | புடவை நூலினை சுற்றும் அல்லது சுருட்டும் இயந்தரங்கள் (ஊடு இழையை சுற்றும் இயந்திரங்கள் அடங்கலாக) | ● நூல் சுற்றும் இயந்திரம் |
| 7. | 8447.11.00 | 165 மி. மீற்றருக்கு மேற்படாத உருளை விட்ட அளவினைக் கொண்ட வட்ட வடிவமான பின்னல் இயந்திரங்கள் | ● பின்னல் இயந்திரம் |
| 8. | 8447.90.00 | பிற (வட்ட வடிவமான பின்னல் இயந்திரங்கள்) | ● பூத்தைத்தல் இயந்திரம்<br>● கணினி மயமாக்கப்பட்ட பன்முக பூத்தையல் இயந்திரம்<br>● நேர்த்தியாக்கும் இயந்திரம் |
| 9. | 8451.21.00 | உலர்த்தும் இயந்திரங்கள் : ஒவ்வொன்றும் 10 கி. கிராமிற்கு மேற்படாத உலர் கைத்தறி நூலின் கொள்ளளவைக் கொண்டவை | ● தன்னியக்க உலர்த்தி<br>● கன்வேயர் ரனல் உலர்த்தி |
| 10. | 8451.29.00 | பிற (உலர்த்தும் இயந்திரங்கள்) | ● ஆற்றல் சேமிப்பு நீராவி உலர்த்தி<br>● 16'' மாதிரி கரைக்கும் இயந்திரம்<br>● நீராவியால் மாதிரி உலர்த்தும் இயந்திரம் |

**அட்டவணை (தொடர்ச்சி)**

| நிரல் I | நிரல் II | நிரல் III | நிரல் IV |
|---|---|---|---|
| இல. | எச். எஸ். குறியீடு | விபரம் | அகற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள |
| 11. | 8451.30.00 | ஆடை இஸ்திரிகள் மற்றும் அழுத்திகள் உருக்கி அழுத்தும் அழுத்திகள் அடங்கலாக) | • தொடர்ச்சியான உருகுநிலை இயந்திரம்<br>• மடிக்கும் பட்டடை இயந்திரம்<br>• சுற்றுப் பட்டை அழுத்தம் மற்றும் உருகு நிலை இயந்திரம்<br>• போலி சட்டை அழுத்தி இயந்திரம்<br>• சமிட் மினி உருகுநிலை இயந்திரம்<br>• இஸ்திரி மற்றும் அழுத்தி இயந்திரம் போலி (டம்மி) அடங்கலாக<br>• பாக்கட் கிரீசர் இயந்திரம்<br>• தன்னியக்க மடிப்பு உருகுநிலை இயந்திரம்<br>• கை மடிப்பு/பக்க உருகுநிலை இயந்திரம்<br>• சுற்றுப் பட்டை மாதிரி எடுக்கும் இயந்திரம்<br>• முன்புற ப்ளாகட் மற்றும் அரை கைகளை அழுத்தும் இயந்திரம் |
| 12. | 8451.40.10 | புடவை நூல்கள் மற்றும் துணிகளுக்கான சலவை செய்யும், வெளிரச் செய்யும் அல்லது சாயமூட்டும் இயந்திரங்கள் | • நூல் சுத்தப்படுத்தும் இயந்திரம்<br>• துண்டு சாயமிடும் இயந்திரம் |
| 13. | 8451.40.90 | பிற (சலவை செய்யும், வெளிரச் செய்யும் அல்லது சாயமூட்டும் இயந்திரங்கள்) | • முன்புறம் பாரமேற்றும் ஆடை தொழிற் சாலை சலவை இயந்திரம்<br>• குலுக்கல் பாணியிலான டிப் சாயமிடும் இயந்திரம்<br>• ஆய்வக சலவை இயந்திரம்<br>• விழி உணர் நூல் சுத்தப்படுத்தும் இயந்திரம்<br>• தன்னியக்க பரவல் இயந்திரம் |
| 14. | 8451.50.00 | துணிகளை சுருட்டும், தளர்த்தும், மடிக்கும், வெட்டும் அல்லது அலங்கரிக்கும் புடவை இயந்திரங்கள் | • பேண்ட் நைப் (Band Knife) வெட்டும் இயந்திரம்<br>• லெக்ரா கட்டிங் (Lectra Cutting) இயந்திரம்<br>• என்ட் கட்டர் (End Cutter) இயந்திரம் |
| 15. | 8451.80.10 | பிற இயந்திரங்கள் : முடிவுறுத்தும் புடவை துணிகளுக்கானவை | • துணிகளை சுருட்டும்/அளக்கும் இயந்திரம் |
| 16. | 8451.80.90 | பிற (பிற இயந்திரங்கள்) | • துணிகளை தளர்த்தும் இயந்திரம்<br>• எகநோமிக் (Economic) நூல் சுத்தப்படுத்தும் இயந்திரம்<br>• வியட் பேன்ட் நிறைவு இயந்திரம்<br>• நூல் ரைமர் இயந்திரம் |
| 17. | 8452.21.00 | பிற தையல் இயந்திரங்கள் - தன்னியக்க அலகுகள் | • தன்னியக்க குறுகிய சீமர் தையல் இயந்தரம்<br>• பொக்கட் செட்டர் இயந்திரம்<br>• தன்னியக்க பிரீ ஆர்ம் அலங்கரிக்கும் இயந்திரம்<br>• தொழிற்துறை தையல் இயத்திரம்<br>• ஸ்லீவ் பனாகட் செட்டர் வடிவ இயத்திரம்<br>• சுற்றுப்பட்டை மற்றும் கழுத்துப்பட்டை ஒரு தையல் இயத்திரம் |

**அட்டவணை (தொடர்ச்சி)**

| நிரல் I | நிரல் II | நிரல் III | நிரல் IV |
|---|---|---|---|
| இல. | எச்.எஸ். குறியீடு | விபரம் | அகற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள இயந்திரங்களும் உபகரணங்களும் |
| | | | • யுனிவர்சல் ப்ளப் பாக்கட் தையல் இயந்திரம்<br>• கன்சை ஸ்பெஷல் DFB - 1412 PMD தையல் இயந்திரம்<br>• ஜுகி ரக தொழிற்சாலை தையல் இயந்திரம்<br>• கொளர் போன்ஸ் மற்றும் லேபல் இயந்திரம்<br>• முன்புற பெனல்களை அறுக்கும் இயந்திரம்<br>• 3 ஊசி 5 நூல்களைக் கொண்ட ப்ளட்பெட் இன்டர்லொக் தையல் இயந்திரம்<br>• ஹைகாரி அதிவேக 3 ஊசி 2 சங்கிலி தையல் இயந்திரம்<br>• கணினி கட்டுப்பாட்டு அதிவேக பார் ரெகிங் இயந்திரம்<br>• தன்னியக்க இரட்டை நூல் சங்கிலி தையல் பொத்தான் துளையிடும் இயந்திரம் |
| 18. | 8452.29.00 | பிற தையல் இயந்திரங்கள் | • ஒற்றை ஊசி ஹெம்மர் தையல் இயந்திரம்<br>• கன்சை 6 ஊசி, ஊசியினால் இடுப்பு நாடாவை இணைக்கும் இயந்திரம்<br>• கன்சை 11 ஊசி 1/8'' இரட்டை சங்கிலி தையல், முன்புற பிளகட் இணைந்துள்ள இயந்திரம்<br>• கன்சை 23 ஊசி இரட்டை சங்கிலி தையல், ப்ளட்பெட் இயந்திரம்<br>• தன்னியக்க 1 ஊசி பட்டி வளையம் இணைப்பு இயந்திரம்<br>• சட்டை பின்புற பெட்டி மடிப்பு மற்றும் பக்க மடிப்புகளை மடிக்கும் இயந்திரம்<br>• டர்கொப் தையல் இயந்திரம்<br>• துணிகளின் விளிம்புகளை தைக்கும் மற்றும் அலங்கரிக்கும் இயந்திரம்<br>• டார்ட் மற்றும் இடுப்பு மடிப்பை தைக்கும் இயந்திரம் |
| 19. | 8460.90.00 | பிற (எந்தவொரு அச்சையும் குறைந்தபட்சம் 0.01 மி.மீ அளவுக்கு துல்லியமாக அமைக்கும் அமைப்பு கொண்ட (பிற அரைக்கும் இயந்திரங்கள்) | • வெட்டும் இயந்திரம் |
| 20. | 8462.29.00 | பிற (வளைக்கும், மடிக்கும், நேராக்கும் அல்லது சமப்படுத்தும் இயந்திரங்கள் (அழுத்திகள் அடங்கலாக) | • பூத்தையல் இயந்திரம் |
| 21. | 8472.90.00 | பிற (பிற அலுவலக இயந்திரங்கள்) | • புடைப்பு (எம்போஸிங்) இயந்திரம் |
| 22. | 8479.89.90 | பிற (பிற - பிற இயந்திரங்களும் இயந்திர உபகரணங்களும்) | • குரோமட் இணைப்பு இயந்திரம்<br>• ஐலட் இணைப்பு இயந்திரம் |
| 23. | 8543.70.90 | பிற (பிற இயந்திரங்களும் உபகரணங்களும்) | • ஊசி கண்டறியும் இயந்திரம்<br>• கன்வேயர் வகை ஊசி கண்டறியும் இயந்திரம் |

**அட்டவணை (தொடர்ச்சி)**

| நிரல் I | நிரல் II | நிரல் III | நிரல் IV |
|---|---|---|---|
| இல. | எச். எஸ். குறியீடு | விபரம் | அகற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள இயந்திரங்களும் உபகரணங்களும் |
| 24. | 8424.89.00 | பிற (பிற உபகரணங்கள்) | ● மடிப்பு அகற்றும் தெளிப்பு இயந்திரம் |
| 25. | 7321.12.00 | சமையல் உபகரணங்கள் மற்றும் தகடு வெப்பமேற்றிகள்: திரவ எரிபொருளுக்கானவை | ● நீராவியால் இயக்கப்படும் இரட்டை மேலுறை சாம்பார் பாத்திரம்<br>● நீராவியால் இயக்கப்படும் இரட்டை மேலுறை அரிசி பாத்திரம்<br>● நீராவியால் இயக்கப்படும் இரட்டை மேலுறை பால் பாத்திரம் |
| 26. | 9031.80.00 | பிற ஒளியிழை கருவிகளும் உபகரணங்களும்: பிற கருவிகள், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் | ● துணி ஆய்வு இயந்திரங்கள் |

04 - 348

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.